**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 31.05.2023
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உழவர் உற்பத்தியாளர் சங்கங்களுக்கான மேலாண்மை பயிற்சி

தொழில்நுட்ப வணிககாப்பகம், வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் மே 31 மற்றும் ஜீன் 1, 2 தேதிகளில் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பின் கீழ் இயங்கும் உழவர் உற்பத்தியாளர் சங்கங்களுக்கான மேலாண்மை பயிற்சி தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறையின் துணையோடு கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள FPOs ஐ சேர்ந்த சுமார் 80 விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது. வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் இயக்குனர் முனைவர் ஏ.சோமசுந்தரம் அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து வேளாண் வணிகத்திற்கான வாய்ப்புகளை குறித்து விரிவுரை வழங்கினார். தொழில்நுட்ப வணிககாப்பகத்தின் தலைமை செயல் அதிகாரி, திரு.A.V.ஞானசம்பந்தம், அவர்கள் வரவேற்புரையாற்றினார். முனைவர் சாந்த சீலா மற்றும் முனைவர் M.மலர்கொடி விவசாயிகளிடம் உரை நிகழ்த்தினர்.

துறை சார்ந்த வல்லுநர்களைக் கொண்டு அங்கக விவசாயிகளுக்கான உழவர் உற்பத்தியாளர் சங்கம் உருவாக்குதல், உழவர் உற்பத்தியாளர் சங்ககங்களுக்கான சட்ட திட்டங்கள், உற்பத்தி பொருட்களுக்கான வாய்ப்புகள் மற்றும் சவால்கள், நிர்வாகம், விளை பொருட்களின் விலை நிர்ணயம் மற்றும் ஏற்றுமதி, நிதி மேலாண்மை, தலைமைத்துவ திறன் மேம்பாடு மற்றும் குழு உருவாக்கம், தோட்டக்கலை பயிர்களின் மதிப்புக்கூட்டல் ஆகிய தலைப்புகளில் பயிற்சி நடைபெறுகிறது.

இப்பயிற்சிக்குப்பின் ஒரு நாள் விவசாய கண்டுணர் சுற்றுலா தமிழகத்திலும் மற்றும் 5 நாள் விவசாய சுற்றுலா அண்டை மாநிலத்திலும் நடைபெறும். இப்பயிற்சி தொடக்கநிலை உள்ள உழவர் உற்பத்தியாளர் சங்ககங்களுக்கு வேளாண் வணிகம் சார்ந்த சவால்களை எதிர் கொள்ளவும் திறனை மேம்படுத்தி கொள்ளவும் ஒரு வாய்ப்பாக அமையும்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஆதரவுடன் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பானது 318 உழவர் அமைப்புகளில் உறுப்பினர்களை வேளாண் தொழில் முனைவோராக மாற்றுவதற்கு இதே போன்ற பயிற்சிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**